| | | |
|---|---|---|
| சாட்சி : RW1<br>சேரன் | EP.No.33/2020 | 23.04.2025 |

குறுக்கு விசாரணை

நிறைவேற்றுகை மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டேன். அ.வ.எண்.7/2014 வழக்கை நான் வழக்கறிஞரை வைத்து நடத்தினேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை நான் படித்து பார்த்தேன். மேற்படி தீர்ப்பை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்துள்ளேன். மேல்முறையீடு எங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் எண் என்ன என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் அ.வ.எண்.7/2014 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மேல்மைமுறையீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேல்முறையீடு தாக்கல் செய்ததாக எனது எதிருரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. வழக்கு சொத்து எனக்கு உரிமையானது இல்லை என அ.வ.எண்.7/2014 தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது எனக்கு தெரியும் என்றால் பொய்யான காரணங்கள் மற்றும் ஆவணங்களை சொல்லி மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை எனது எதிருரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒருவருக்கு உரிமையான சொத்தை அவரது அனுமதியில்லாமல் அனுபவம் செய்ய முடியுமா என்றால் எங்களுக்கு உரிமையான சொத்தை தான் நாங்கள் அனுபவம் செய்கிறோம். வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையானது என்பதற்கு ஆவணங்களை இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை.

வழக்கு சொத்தை அனுபவம் செய்வதற்கு மனுதாரர் தரப்பில் ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் எழுதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை. சொத்து எங்களுடையது. வழக்கு சொத்து அனுபவம் செய்து வருவதற்கு ஏதேனும் ஆவணங்களை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னும் மனுதாரர்களுக்கு நாங்கள் இடையூறு செய்துவருகிறோம் என்றால் மனுதாரர்கள் தான் எங்களுக்கு இடையூறு செய்துவருகிறார்கள். எனது நிலத்திலிருந்து கீழ்புறத்தில் 3 வயல் தள்ளி ரோட்டு ஓரத்தில் கடை உள்ளதா என்றால் 1/2 கிலோ மீட்டர் தள்ளி கடை உள்ளது. எனது நிலத்திலிருந்து கீழ்புறம் 3 வயல் தள்ளி ரோட்டு ஓரத்தில் கடை உள்ளது என்றும், அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கடையில் உரிமையாளர் தான் மனுதாரர்களின் அனுபவத்திற்கு நாங்கள் இடையூறு செய்வதாக மனுதாரர்களுக்கு தகவல் தெரிவித்து இந்த நிறைவேற்றுகை மனுவை எங்களுக்கு எதிராக மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. கடையின் உரிமையாளர் அங்கு வரவில்லை. தீர்ப்புக்கு பிறகு மனுதாரர்களின் அனுபவத்திற்கு நாங்கள் இடையூறு செய்ததால் மனுதாரர்கள் ஜீயபுரம் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தபாலில் கொடுத்ததாகவும், வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டு கொடுத்ததாகவும் சொன்னார்கள். வழக்கு சொத்தில் மனுதாரர்களின் அனுபவ, சுவாதீனத்திற்கு தீர்ப்புக்கு பின்னிட்டும் நான் இடையூறு செய்ததால் வாத்தலை காவல் நிலையத்திலும், ஜீயபுரம் காவல் துணை கண்காணிப்பாளர்

அலுவலகத்திலும் மனுதாரர்கள் மனு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் ம.தி.மு.க– வில் திருச்சி மாவட்ட செயலாளராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கட்சி ஆளும் கட்சியுடன் கூட்டணியில் இருந்துவருகிறது. எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்புக்கு குந்தகம் விளைவித்து வருகிறேன் என்றால் எங்களது சட்ட உரிமையை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம், இதில் அரசியல் துஸ்பிரயோகம் எதுவும் இல்லை. மனுதாரர்கள் 2018 ல் அடியாட்களை வைத்து நாங்கள் விவசாயம் செய்துவருவதற்கு இடையூறு செய்யும்விதமாக அருவா மற்றும் இரும்பு ஆயுதங்களை வைத்து தாக்க முயன்றதாக வாத்தலை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து கபிலன் என்பவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மேற்படி விவரங்களை எனது எதிருரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. ஆதாரம் உள்ளதால் நாங்கள் சொல்லவில்லை. மேற்சொன்ன விவரங்கள் எதுவும் நடக்கவில்லைஎ ன்றும், நான் வழக்கிற்காக பொய்யாக மேற்படி விவரங்களை நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. FIR உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவைப்படும் போது தாக்கல் செய்வேன். நான் அரசியல் பிரமுகர் என்பதால் தான் வழக்கு சொத்தில் நான் அத்து மீறி நீதிமன்ற தீர்ப்புக்கு விரோதமாக செயல்பட்டதால் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் வழக்கில் பொய்யான காரணங்களை சொல்லி ஜோடிப்பதற்காக தான் அந்த புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி ஜோடிக்கப்பட்ட புகார் என்பதை எனது எதிருரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை.

மனுதாரர்கள் காவல் நிலையத்தில் நேரடியாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த விவரம் தெரிந்தும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அந்த புகாரின் மீது மேல்நடவடிக்கை எடுக்காமல் தடுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கு தமிழக அரசிடமிருந்தோ அல்லது இந்திய அரசிடமிருந்தோ கௌரமானவர்கள் என்பதற்கு சான்றிதழ் எதுவும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்புக்கு விரோதமாக நான் செயல்பட்டதால் தான் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை எனது தகப்பனார் கிரையம் கொடுத்துவிட்டதால் தான் மனுதாரர்கள் வழக்கு சொத்தை அனுபவம் செய்ய இயலாத அளவிற்கு இடையூறு செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்புக்கு விரோதமாக நடந்து கொள்வது சட்ட விரோதம் என தெரிந்தும் நான் தொடர்ச்சியாக அவ்வாறு செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல.